**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>**

**<u>எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு ஜனவரி 2019 தனித்தேர்வர்கள் தேர்வுக் கூட அனுமதிச்சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்தல்</u>**

**<u>செய்திக்குறிப்பு</u>**

21.01.2019 அன்று தொடங்கவுள்ள எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையின் சேவை மையங்களில் (Service Centre) ஆன் – லைன் மூலமாக விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் **07.01.2019 (திங்கட் கிழமை) பிற்பகல் முதல் www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>பதிவிறக்கம் செய்யும் முறை</u>**

மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் ONLINE PORTAL–ல் CLICK செய்தால் "ESLC JANUARY 2019 EXAMINATION - HALL TICKET" என்ற வாசகத்தினை CLICK செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியை (Date of birth) பதிவு செய்தால் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உரிய தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்காண் தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்களுக்கு தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு குறித்து தனிப்பட்ட முறையில் அறிவிப்பு ஏதும் அனுப்ப இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6.**
**நாள்: 04.01.2019**